செ.வெ.எண்: நாள்: 05.04.2020

**நாமக்கல் மாவட்டம்**

**நாமக்கல் நகராட்சி பகுதியில் காய்கறிகள் வாங்குவதற்காக பொதுமக்கள் சாலைகளில் செல்வதை தடுக்கும் வகையில் நாமக்கல் நகராட்சியின் மூலமாக செயல்படுத்தப்படும் நடமாடும் காய்கறி விற்பனை வாகனங்கள் மூலமாக காய்கறிகள் வாங்கும் பொதுமக்களுக்கு கொரோனா நோய்த்தொற்று தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.**

நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக பொதுமக்கள் சாலைகளில் செல்வதை குறைக்கும் வகையில் நாமக்கல் நகராட்சி பகுதியில் காய்கறி விற்பனை சந்தை நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட 8 இடங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு அந்தந்த பகுதி மக்கள் தங்கள் பகுதியிலேயே காய்கறிகளை வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் பொதுமக்கள் காய்கறிகளை தங்கள் இல்லங்களில் இருந்தே வாங்கிக் கொள்ளும் வகையில் நாமக்கல் நகராட்சி மூலமாக 04.04.2020 அன்று 5 வாகனங்கள் மூலமாக விற்பனை செய்யும் திட்டம் துவங்கப்பட்டது. அன்று மட்டும் 4 கிலோ எடை கொண்ட ரூ.100 மதிப்பிலான காய்கறி தொகுப்புகள் மொத்தம் 580 எண்ணிக்கை விற்பனை செய்யப்பட்டது. இதன் காராணமாக 580 பொதுமக்கள் அத்தியாவசிய பொருளான காய்கறிகள் வாங்குவதற்காக சாலைகளில் செல்வது தடுக்கப்பட்டது.

கத்தரிக்காய், முருங்கைக்காய், தக்காளி, வெங்காயம், முட்டைகோஸ், கருவேப்பிலை, கொத்தமல்லி உள்ளிட்ட பொதுமக்களுக்கு தேவையான 11 வகையான காய்கறிகள் அடங்கிய 4 கிலோ எடை கொண்ட தொகுப்புகள் பைகள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. இதற்காக துறையூர் சாலை நாமக்கல் நகராட்சி திருமண மண்டபத்தில் 30 க்கும் மேற்பட்ட நகராட்சி பணியாளர்கள் நகராட்சி ஆணையாளர் திரு.ஜகாங்கீர் பாஷா அவர்கள் தலைமையில் காய்கறிகள் அடங்கிய தொகுப்புகளை பைகளில் நிரப்பி வாகனங்கள் மூலமாக விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள். பொதுமக்களின் வரவேற்பை அடுத்து 05.04.2020 அன்று முதல் நடமாடும் காய்கறி வாகனங்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்த்தப்பட்டது. இதன் காரணமாக காலை 6.00 மணிக்கு துவங்கும் நடமாடும் காய்கறி விற்பனையானது பகல் 12 மணி வரை மேற்கொள்ளப்பட்டு இன்று மட்டும் 1082 காய்கறி தொகுப்பு பைகள் விற்பனையானதுடன் 1082 பொதுமக்கள் சாலைகளில் நடமாடுவது தடுக்கப்பட்டுள்ளது. மேலும் நடமாடும் காய்கறி விற்பனை

வாகனங்கள் மூலமாக காய்கறிகள் வாங்கும் பொதுமக்களுக்கு செய்தி மக்கள் தொடர்புத்துறையால் தயாரிக்கப்பட்டு, மாவட்ட நிர்வாகத்தால் அச்சிடப்பட்ட கொரோனா நோய்த்தொற்று தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பல்வேறு பொதுமக்கள் தங்கள் பகுதிகளுக்கு வரவேண்டும் என விருப்பப்பட்டால் நகராட்சி வருவாய் ஆய்வாளர் தொலைபேசி எண் 94451 18271 என்ற எண்ணிற்கு காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரை மட்டும் தொடர்பு கொண்டு காய்கறிகளை தங்கள் வீட்டிலிருந்தே வாங்கி பயன்பெறலாம்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.